[1996 ஆகஸ்ட் 20

33--

சாயப்பட்டறைகள் விவரம்

வினா எண் 1116--**திரு. வீ. தமிழ்மணி**: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் எத்தனை உள்ளன? அவை எங்கெங்கு உள்ளன?

(ஆ) இல்லையெனில், சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் 49 உள்ளன. அவற்றில் ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை அரசுத்துறையின் கீழ் ஈரோட்டில் செயல்படுகிறது. இதர 48 சாயப்பட்டறைகளில் ஏழு திருச்செங்கோட்டிலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் பதின்மூன்றும் மதுரை மாவட்டத்தில் இருபத்தெட்டும் செயல்படுகின்றன.

(ஆ) புதிதாக சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

34--

நெசவாளர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் விவரம்

வினா எண் 1616--**திரு. கே. சுந்தர்**: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1990-லிருந்து 1995 வரை நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், உத்திரமேரூர் தொகுதியில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

996 ஆகஸ்ட் 20]

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உத்திரமேரூர் தொகுதியில் இத்திட்டத்தின்கீழ் இதுவரை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை.

35--

நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள்

வினா எண் 1692--டாக்டர் **இ.எஸ்.எஸ்.** *இராமன் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) தமிழ்நாட்டில் நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு அரசு செய்ய இருக்கும் உதவிகள் யாவை?

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. இவை அனைத்தும் இடருதவி நிறுவனங்களாக (Relief Undertaking) *அரசால் சான்றுரைக்கப்பட்டுள்ளன. இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளும் நட்டத்தில் இயங்குகின்றன. இதில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஏப்ரல் 1994-ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் உள்ளது.*

(ஆ) தமிழக அரசு 1996-97-ம் ஆண்டுக்கான தனது நிதி நிலை அறிக்கையில் நலிவுற்ற மற்றும் மூடிக்கிடக்கும் நூற்பாலைகளை புத்துயிர் ஊட்ட ஆவன செய்யப்படும் என அறிவித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அளிக்கப்பட வேண்டியுள்ள உதவிகள் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சீரிய திட்டங்கள்